BITSMANS
INSTITUTES
MANIPAY.
A/L 86 கலை, வர்த்தக
மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்; 6-1-86 3-00 p.m
பொருளியல் - சின்னத்தம்பி
வர்த்தகம் - தேவா
கணக்கியல் - ராஜன்
அளவையியல் - S. S. மனோகரன்
தமிழ் இந்து நாகரிகம் - பாலா

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

BITSMANS
INSTITUTES
MANIPAY.
A/L 86 கணித, விஞ்ஞான
மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 6-1-86 4-00 p.m.
பௌதிகம் - சௌந்தி
இரசாயனம் - மனோகரன்
தாவரவியல் - குகாதரன்
விலங்கியல் - நாகநாதன்
தூய பிரயோக கணிதம் - லிங்மோகன்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு மார்கழி மீ 20 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 22 (04-01-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY | கதிர்:-39

# மாநில சுயாட்சி குறித்து சர்வஜன வாக்கெடுப்பு?

## தேர்தல் திணைக்களத்துக்கு மேலிடம் தயார் உத்தரவு

கொழும்பு, ஜன. 4

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி முறையை நடைமுறைக்குக் கொண்டு வரலாமா? கூடாதா?

இதுகுறித்து தென்னிலங்கை மக்களின் கருத்தை அறிவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று இன்னும் இரண்டொரு மாதங்களில் நடத்தப் படலாம். இவ்வாறு அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி இந்திய அரசாங்கம் மூலம் சமர்ப்பித்த மாற்று யோசனையில் வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியே ஆகக்குறைந்த கோரிக்கையாக விடுக்கப்பட்டிருக்கிறது.

கூட்டணியின் இந்தக் கோரிக்கையை இந்திய அரசாங்கம் முற்றும் முழுதாக ஆதரிப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

இந்த நிலையில் எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்பது குறித்து அரசாங்க வட்டாரங்களில் கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

சிங்கள மக்களின் ஆதரவில்லாமல் இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் உருவாக்கக்கூடாது என்பது அரசாங்கத்தின் ஒரு பிரிவினரின் கருத்து.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் பிரதேச சுயாட்சி வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டால் தற்போது மாநில சுயாட்சியை வழங்கினால் என்ன? - இது மற்றொரு சாராரின் கருத்து.

இவ்வாறு ஒரு சிக்கலான நிலையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதே உசிதம் என அரசாங்க உயர் வட்டாரங்கள் கருதுகின்றன.

இதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு முன்னோடியாகவே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கப்பட்டதாக அரசி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்திமுரளி



கண் காணிப்புக் குழு இண்டைக்கு யாழ்ப்பாணம் வருதுதாக்கும். அதற்கு முன்னுக்கு நிலைமையைக் கண்காணிப்போம் எண்டு நினைச்சுப் போலை எங்கடை இராமண்ணுமார் நேற்று வானததில் வட்டமிட்டவை!

## சுதுமலையில் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர்

### மக்கள் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜன 4

சுதுமலைப் பகுதியில் 'குறிப்பிட்ட ஒரு' இடத்தை ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்றுக் காலை வட்டமிட்டுப் பார்வையிட்டது.

அந்தக் 'குறிப்பிட்ட இடம்' டிசம்பர் 21ஆம் திகதி காலை தேடுதலுக்காக ஹெலிக்கொப்டர்கள் போய் இறங்கிய உடுவில் ஈஞ்சடி தோட்டம் பாலாவோடைப் பகுதிதான்.

வானத்தில் வட்டமிட்ட ஹெலிக்கொப்டரைக் கண்டதும், அப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர்.

ஏதோ என்னவோ என்று ஏங்கினர்.

காலை 10. 30 மணியில் இருந்து 11. 45 வரை ஹெலிக்கொப்டர் வட்டமிட்டு விட்டு பின்னர் சென்றது.

இன்று வரும் கண்காணிப்புக் குழுவுக்கு முதல் நாள் ஒத்திகையோ? என்ற வாறும் எண்ணப்பட்டது.

## கண்காணிப்புக் குழு இன்று யாழ்நகரில்

யாழ்ப்பாணம், ஜன. 4

யுக்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இன்று யாழ்நகர் வருகிறது.

டிசம்பர் மாதத்தில் வடபகுதியில் இடம் பெற்ற நான்கு அசம்பாவிதங்கள் பற்றிய குழு இன்றும் நாளையும் விசாரணை நடத்தும்.

✶ அரியாலை, கொழும்புத்துறைப் பகுதியில் டிசம்பர் 20 இல் நடைபெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல்.

✶ டிசம்பர் 21 இல் சுதுமலையில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல்.

✶ பொன்னாலை - வலந்தலைச் சம்பவம்- டிசம்பர் 17 இல் நடந்தது.

✶ வல்வெட்டித் துறை, தொண்டமனாறுப் பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்கள்.

மேற்படி நான்கு விடங்களே விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

## சுபநேரம்

04-01-1986

சனிக்கிழமை

சுபநேரம்

3.31 முதல் - 5.01 வரை

ராகு காலம்

9 31 முதல்– 11 01வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

அட்டமி

மு ப. 9 38 வரை

## வவுனியாவில் சடலம்

யாழ்ப்பாணம், ஜன.4

இனந்தெரியாத சடலம் ஒன்று வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

40 வயது மதிக்கத்தக்க ஒரு ஆணின் சடலம் அது.

வவுனியா - கண்டிவீதியில் உள்ள ஒரு விகாரையில் இருந்து 200 யார்களுக்கு அப்பால் இச்சடலம் கிடந்தது.

இறந்தவர் பற்றிக்சாரமும் சேட்டும் அணிந்திருக்கக் காணப்பட்டார்.

## வீர சூரியாவுக்கு புதிய பதவி

கொழும்பு, ஜன. 4

பாதுகாபபு அமைச்சின் மேலதிக செயலாளரும், திட்டமிடல் அமைச்சின் செயலாளருமான கலாநிதி விக்கிரம வீரசூரியா இலங்கையின் ஆஸ்திரேலிய தூதுவராக நியமிக்கப்பட்டார்.

## சுட்டுக் கொலை

கொழும்பு, ஜன. 4

வாழைச்சேனையில் தொலைத்தொடர்புதிணைக்களக ஊழியர் ஒருவர் கடைக்குச் செல்லும் வழியில் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் முஸ்லிம் நபர் ஒருவரும் காயமடைந்தார்.

## நிலா வெளியில் 82 பேர் இன்னும் விடுவிக்கப்படவில்லை

திருகோணமலை, ஜன. 4

நிலாவெளித் தேடுதலில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டவர்களில 82 பேர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

ஏனையோர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப் பட்டுவிட்டனர்.

## உங்கள் தபால் போய்ச் சேர்ந்ததா?

### பெட்டிக்குள் வெடி கொளுத்தி போட்ட விஷமிகள்

யாழ்ப்பாணம், ஜன. 4

புத்தாண்டு தினத்தில் சில தபால் பெட்டிகளில் போடப்பட்ட தபால்கள் உரியவர்களிடம் போய்ச் சேராவிட்டால், தபால் அலுவலகம்மீது பழியைப் போடவேண் ாம். பட்டாசுகொளுத்தி தபால் பெட்டிகளினுள் போட்டு வேடிக்கை பார்த்தவர்கள்மீது பழியைப் போடுங்கள்.

யாழ். பிரதம தபால்நிலைய அதிகாரி ஒருவர் இப்படி உதயன் செய்தியாளரிடம் சொன்னார்.

புத்தாண்டு தினத்தில் சீனவெடிகளைக் கொளுத்தி அஞ்சல் பெட்டிக்குள் போட்டு வேடிக்கை பார்த்தார்களாம் சில பிரகிருதிகள்.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள சில தபால் பெட்டிகளில்தான் இவ்விஷமம் இடம் பெற்றது.

இதனால், பெட்டிகளினுள் போடப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடிதங்கள் சில தீக்கிரையாகிவிட்டன.

தபால்கள் சேகரிக்கும் சமயத்தில்தான் இது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆகவே வெளிநாட்டில் உள்ள உறவினர்களுக்கு, பெட்டிக்குள் போட்ட தபால் கிடைக்கவில்லையே என்று தபால் அலுவலகம்மீது பழியைப் போடுவதில் பிரயோசனமே இல்லை.

இப்படி அந்தத் தபால் அலுவலக உயர் அதிகாரி கவலைப்பட்டார்.


## யாழ் இரத்த வங்கிக்கு இரத்தம் தேவை

நல்லூர், ஜன. 4

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்த வங்கிக்கு உடனடியாக இரத்தம் தேவைப்படுகிறது.

இரத்தம் வழங்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது 15 பைந்து இரத்தம் மட்டுமே இரத்த வங்கியின் கையிருப்பில் இருக்கிறதாம்.



மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. சு ஸ்ரீபாஸ்கரன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. பொ. நாகரத்தினத்திடம் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம்.

## லண்டன் றன்பேர்லி தமிழ்ப் பகுதிகளுக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 4

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள், நூல்நிலையங்களுக்கு நூல்களை அன்பளிப்புச் செய்வதற்கு லண்டனில் உள்ள றன்பேர்லி நூல் நிலைய சேவை முன் வந்து உள்ளது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாகவே லண்டன் நிறுவனம் நூல்களை அன்பளிப்புச் செய்யும். இத்தகவல்களை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ஐ. எஸ். ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார்.

ஏற்கனவே லண்டன் றன்பேர்லி நூல்நிலைய சேவை நிறுவனம், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 1,792 நூல்களை அன்பளிப்பாக வழங்கி இருக்கிறது. இவற்றில் 900 நூல்களை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் (145), பரியோவான் கல்லூரி (100), மகாஜனக் கல்லூரி(110), மல்லாகம் மகாவித்தியாலயம் (113), ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (120), யாழ்ரன் கல்லூரி (102) விக்ரோறியாக் கல்லூரி (110), யூனியன் கல்லூரி (100), ஆகியவற்றுக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் மறு அன்பளிப்புச் செய்தது.

மிகுதி நூல்கள் சங்கத்திடம் உள்ளன.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## உதவி அரச அதிபர் சமாதான அதிகாரியாக பணியாற்ற சட்டம் திருத்தம்

கொழும்பு, ஜன. 4

உதவி அரசாங்க அதிபர், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரும் சமாதான அதிகாரிகளாக கடமையாற்றக் கூடியதாக குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை திருத்தப்பட உள்ளது.

இது சம்பந்தமான சிபார்சு ஒன்றை உள்நாட்டு அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து இருந்தார்.

அமைச்சரவை நேற்று அதை ஏற்றுக் கொண்டது.

இதற்காக குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் (1979) 15 ஆம் பிரிவு திருத்தப்படவுள்ளது.

தற்போது கிராம சேவை அதிகாரிகள் மட்டுமே சமாதான அதிகாரிகளாகக் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருத்தம் சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தவுடன் உதவி அரசாங்க அதிபர்களும் பாதுகாப்பு அதிகாரிகளும் சமாதான அதிகாரிகளாகப் பணியாற்றலாம்.

சமாதானத்துக்கு பங்கம் விளைவிப்பவர்களைக் கைதும் செய்யலாம்.

## ஜனவரியில் ஒய்வூதியம் பெறும் தினங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 4

தபால் அலுவலகம் மூலம் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஜனவரி மாதம் துரையப்பா விளையாட்டு அரங்கில் ஓய்வூ

(4-ஆம் பக்கம் பார்க்க)

# மாமிக்கு குடியுரிமை; மருமகன் மர்மத்தை விளக்குகிறார்

கொழும்பு, ஜன. 4

அரசமைப்புச் சட்டம் திருத்தப்படும்.

உபஜனாதிபதி பதவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு வழங்கப்படும்.

மாமிக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்பட்டதன் பின்னணி இது தான்.

சிறிமாவின் மருமகன் திரு. விஜய குமாரணதுங்கமேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப பொதுச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்காவிடம் திருமதி பண்டாரநாயக்காவுக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்பட்டது பற்றிக் கருத்துக் கேட்கப்பட்டது.

திரு. விஜய குமாரணதுங்க சொன்னதாவது; சர்வஜன வாக்கெடுப்பு, ஜனாதிபதித் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி யாரை ஆதரித்தது என்பது வெளிப்படை.

யு. என். பி.யை ஆதரித்த சுதந்திரக் கட்சியின் தலைவிக்கு இப்பொழுதுமீண்டும் குடியுரிமை வழங்கப்பட்டதன் பின்னணி, விரைவில் தெரியத்தான் போகின்றது. அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு, விரைவில் திருமதி பண்டாரநாயக்கா உபஜனாதிபதியாக்கப்படுவார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு பொதுத் தேர்தல்

(4- ஆம் பக்கம் பார்க்க)

## லக்ஷ்மன் ராஜினாமாச் செய்து இடைத்தேர்தலில் சிறிமா போட்டி

கொழும்பு ஜன. 4

அத்தனகல்லைத் தொகுதியில சிறிமா போட்டியிடுவதற்காக திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி தமது எம். பி பதவியை ராஜினாமாச் செய்வாரா?

அத்தனகல்லைத் தொகுதியில் இடைத் தேர்தல் ஒன்றை நடத்த வைப்பதன் மூலம் பொதுத் தேர்தல் வேண்டும் என்ற இயக்கத்தைத் தீவிரப் படுத்துவது பற்றி சுதந்திரக் கட்சியினர் ஆராய்ந்துவருகின்றனர்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு திங்கட்கிழமை கூடும் பொழுது, இது குறித்து ஆலோசனை செய்யும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கிரஸ் நூற்றுண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட சுதந்திரக் கட்சிக் குழுவுக்கு அத்தனகல்லை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி தலைமைவகித்துச் சென்று இருந்தது தெரிந்ததே.

திரு. ஜயக்கொடி, இந்தியாவில் இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்டர் சிற்றி நேற்றும் தாமதம்

யாழ்ப்பாணம், ஜன. 4

இன்டர் சிற்றி ரயில் 1 மணித்தியாலம் தாமதமாக யாழ் ரயில் நிலையம் வந்து சேர்ந்தது.

அனுராதபுரத்தில் வைத்து எஞ்ஜினில் கோளாறு ஏற்பட்டது.

அதன் காரணமாகவே 'இன்டர்சிட்டி' தாமதம் ஆகியது.

அக்கரைப்பற்று

## வைத்திய அதிகாரி விடுதியில் கொள்ளை

அக்கரைப்பற்று, ஜன. 4

அக்கரைப்பற்று பெரியாஸ்பத்திரி வைத்திய அதிகாரியின் விடுதியில் நேற்று (வெள்ளிக் கிழமை) இரவு கொள்ளையடிக்கப்பட்டது.

இரவு 7-15 மணியளவில் ஆயுதந் தாங்கிய 4 இளைஞர்கள் விடுதிக்குள் புகுந்தனர்.

விடுதியில் இருந்த 2 பெண் டாக்டர்கள், பல் வைத்தியர் ஒருவரின் பனைவி, ஒரு மாணவி, ஒரு தாதி ஆகியோரைத் துப்பாக்கிமுனையில் விடுதியின் அறை ஒன்றுக்குத் தள்ளிச் சென்றனர். அறைக்கதவைப் பூட்டிவிட்டு ஆயுத முனையில்

(4- ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## அதிர்ஷ்டம் வரும் என காத்திருக்கிறார் நிஷா

நாகூரில் இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த நூர்ஷா, சினிமாவில் சேர்ந்தவுடன் நிஷா ஆனார்.

''கல்யாண அகதிகள்'' படத்தில் ஒரு முஸ்லிம் பெண் தன் கதையைக் கூறும் போது – அந்த விவாகரத்து பெறும் காட்சியில் இளகாத மனமே இருக்காது.

அந்த முஸ்லிம் பெண்ணாக நடித்தவர் நிஷா தான்.

அவர் இப்படி சொல்கிறார்.

இசையமைப்பாளர் சந்திரபோஸ், என் மாமா சுல்தான் அவர்களின் நண்பர். அவர் என்னை இயக்குநர் குகநாதனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

''முயலுக்கு மூன்று கால்'' படத்தின் மூலம் திரையுலகில் அடியெடுத்து வைத்தேன்.

''கடவுள் அமைத்த மேடை''யில் கதாநாயகியாக, மாஸ்டர் ஸ்ரீதருக்கு ஜோடியாக நடித்தேன்.

இயக்குநர் பாலச்சந்திரன் படங்களைப் பார்க்கத் தவறமாட்டேன். படிக்கும் போது ''மூன்று முடிச்சு'' படத்தைப் பார்த்து விட்டு, அவரது படத்தில் நடித்து விட வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்தேன்.

அந்த நீண்ட கால ஆசையை ''கல்யாண அகதிகள்'' படத்தின் மூலம் நிறைவேற்றிக் கொண்டேன்.

சாயி (சுப்புலட்சுமி) யிடம் முறைப்படி பரத நாட்டியத்தைப் பயின்றுள்ளேன் அந்தப் பயிற்சி எனக்கு சினிமாவுக்கு உதவியாக இருக்கும்.

சினிமாவைப் பொறுத்தவரையில் அதிர்ஷ்டம் முக்கியம். எப்போது கதவைத் தட்டுகிறதோ அப்போது புகழின் உச்சியை அடையலாம் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

அந்த அதிர்ஷ்டம் நிச்சயம் என் வீட்டுக் கதவையும் தட்டத்தான் செய்யும்'' என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறார் நிஷா.

## பஞ்சாப்பில் மீண்டும் வன்செயல்கள்

### மத்திய அரசு கவலை

சண்டிகார், ஜன. 3

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த 3 மாதங்களில் 50பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பஞ்சாபில் மாநில சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று அகாலி தள் அரசு அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வன்செயல்கள் அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய அரசு, மாநில அரசிடம் கவலையும் தெரிவித்துள்ளது.

சீக்கிய தீவிரவாதிகளே இவ் வன்செயல்களுக்குக் காரணம்.

புதன்கிழமை பஸ் ஒன்றின் மீது சீக்கியத் தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒரு பொலீஸ் அதிகாரி மரணமடைந்தார்.

## கற்பித்தலில் மட்டும் அன்றி தொழிற்சங்க துறையிலும் பெண்கள் ஈடுபாடு

### கருத்தரங்கில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 4

'தொழிற் சங்கத்துறையில் தமிழ்ப் பெண்களின் பங்களிப்பு சிறப்பாக இல்லை என்ற நிலையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பொய்ப்பித்து விட்டது கற்பித்தல் பணியில் மட்டுமன்றி உரிமைகளை வென்றடுக்கும் தொழிற் சங்கப் பணியிலும் தமிழ் ஆசிரியைகள் முன்னிற்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினூடாகக் காணும் போது மிதந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கருத்தரங்கைத் தொடக்கி வைத்து உரையாற்றிய உதவித் தொழில் ஆணையாளர் என். சி இராஜநாயகம் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கச் சம்மேளனம், பிரெட்றிச் ஈபேர்ட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் ஆசிரியர் தொழிற் சங்கச் செயற்பாடுகளில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பு தொடர்பான கருத்தரங்கு வயாவிளான் ம. ம. வித்தியாலயத்தில் த. மகாசிவம் தலைமையில் நடைபெற்றது..

இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில் யாழ்ப்பாண மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் என். சி இராஜநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது.

தொழிற் சங்கப் பணியில் இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடக் கூடியளவு உண்டு.

இலங்கையில் பெண்கள், தாங்கள் சார்ந்த தொழிற் சங்கப் பணியில் அதிக நாட்டம் காட்டுவதில்லை.

என்றாலும், தமிழ்ப் பெண்கள் சிறப்பாக ஆசிரியைகள் தமது தொழிற் சங்கப் பணிகளில் ஆர்வமாக ஈடுபடுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தமது தலைமையுரையில் ஆசிரியைகளுக்காக நாம் முன்னரும் கருத்தரங்குகள் சிலவற்றை நடத்தியிருக்கிறோம்.

இக் கருத்தரங்குகள் மூலம் ஆசிரியைகள் குறிப்பிடக் கூடியளவு பங்களிப்பினைத் தொழிற் சங்கத்துறையில் வழங்கி வருகிறார்கள் என்றார்.

### விடுதலைத்தலைவி மரணம்

பிரிட்டோரியா, ஜன3

ஆபிரிக்க விடுதலை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்த வெள்ளையர் இனத் தலைவரான திருமதி பிளாக்போர்ண் காலமானார்

இவரது மரணச்சடங்குகளில் பெருந்தொகையான கறுப்பின மக்களும் கலந்து கொண்டு தமது அஞ்சலியை ச்செலுத்தினர்.

இப்பகுதியில் கறுப்பினத்தவரல்லாத ஒருவரின் மரணச்சடங்குகளில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டது இதுவே முதல் நிகழ்ச்சியென செய்திகள் தெரிவித்தன.

மேற்காசியாவில்

# அமைதிச் சூழ்நிலை உருவாக வேண்டும்

## உழைக்கப் போவதாக எகிப்து சங்கற்பம்

கெய்ரோ, ஜன. 3

பதற்றமும் கலவரங்களும் மேற்காசியாவிலிருந்து தவிர்க்கப்படவேண்டும். இதற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய சூழ்நிலை ஒன்று இங்கு உருவாக்கப்படவேண்டும்.

இதற்கேற்ற முயற்சிகளை இப்புத்தாண்டிலிருந்து தான் மேற்கொள்ளப் போவதாக எகிப்து அறிவித்துள்ளது

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த எகிப்திய வெளியுறவு அமைச்சர் கலீல்,

எகிப்து மேற்கொள்ளும் முயற்சிகளின் வெற்றி இதற்குக் கிடைக்கக் கூடிய ஆதரவுகளில் தான் உருவாக முடியும்'

பிராந்தியத்திலுள்ள மற்றைய நாடுகள் இதற்கு ஆதரவாக நடந்து கொள்வதிலேயே அந்த வெற்றி மேலும் தங்கியிருக்கிறது.

மேற்காசியாவில் அமைதி ஏற்பட வேண்டுமானால் பலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும். பலஸ்தீன மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்குவதுதான் அந்தத் தீர்வு

இப்படியொரு சூழ்நிலை மேற்காசியாவில் உருவாகும்வரை அமைதி நிலை அங்கு ஏற்பட முடியாது இவ்வாறு அவர் எச்சரித்துள்ளார்.

பங்களாதேஷ் வேலைநிறுத்தம்:

## அரசுக்கெதிராக பதவி துறப்போம்

### ஊழியர் எச்சரிக்கை

டாக்கா ஜன,3

எமது கோரிக்கைகளை அரசு செவிமடுக்காது மிரட்டல் நடவடிக்கைகளிலீடுபட்டால் பதவிகளைத் துறந்து விடுவோம்.

இவ்வாறு பங்களாதேஷில வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசடணியகங்களின் ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வேலை நிறுத்தத்திலீடுபட்ட பல தொழிலாளர்களை அரசு கைதுசெய்து காவலில் வைத்துள்ளது.

40,000 தொழிலாளருக்குக் கூடுதலானோர் அங்கம்வகிக்கும் தொழிற் சங்கத்தின் பணிமனையும் பொலீஸாரினால முற்றுகையிடப்பட்டது

தமது விஷயத்தில் அரசு கடைப்பிடிக்கும் மேற்படி கடுமையான போக்குகளைக் கண்டித்தே பதவிகளை ராஜினாமாச் செய்யப்போவதான எச்சரிக்கை விடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வளரும் நாடுகளின் கடன் வட்டி குறையும்

### உலக வங்கி அறிவிப்பு

புதுடில்லி, ஜன.3

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு வழங்கப்படும் தனது கடன் வட்டியை உலக வங்கி குறைக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இந்த மாதத் துவக்கத்திலிருந்து வட்டி விகிதக் குறைப்பு நடைமுறைப் படுத்தப்படும்.

1982 ஆம் ஆண்டு உலக வங்கி கடன் வழங்கும் கட்டணங்களை ஆண்டுக்கு இரண்டு முறை மாற்றியமைப்பது என்று தீர்மானித்திருந்தது.

அதனடிப்படையிலான கொள்கை தீர்மானத்துக்குப்பின் செய்யப்படும் 7வது தொடர்ச்சியான குறைப்பாகும்

## வெளி உலகில்

பிரிட்டனில்

### அலுமாரி மறைவுகளில் காதல் களிப்புகள்

#### நிறுவன நிர்வாகத்துக்கு புதிய நெஞ்சிடி

பிரிட்டன் அலுவலகங்களுக்குள் காதல் சிட்டுகள் தம் களிப்பு நடவடிக்கைகளை நினைத்தபடி நடத்தி வருகிறார்கள்.

இந்த நடவடிக்கைகளின் பெருக்கத்தால் நிறுவன நிர்வாகிகளுக்குப் பெரிய நெஞ்சிடியே ஏற்பட்டுள்ளது. உற்பத்தி பாதிப்படைகிறது.

ஸ்றுத்கிளைட் வர்த்தகப் பாடசாலை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையிலேயே மேற்கண்ட தகவல் வெளியாகியது

பணியகங்களிலுள்ள அலுமாரி அடுக்குகளின் இடைமறைப்புகள் இவர்களின காதல் விளையாட்டிடங்களாக இருக்கின்றன என நிறுவனமுகவர்கள் கூறுவதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பெரிய நிறுவனங்கள் பலவற்றின் நிர்வாகிகளைத் தொடர்பு கொண்டே இந்த அறிக்கை வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

### புதுச்சேரி யூனியன் அரசு கோரிக்கை

பாண்டிச்சேரி, ஜன.3

புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு, இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

மத்திய மாநில உறவு பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வென்று நியமிக்கப்பட்ட சக்காரியா கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் புதுச்சேரி முதலமைச்சர் ஜனாப். ஓ. எஸ். எம். பாரூக் மரைக்கார் தலைமையிலான குழு இக் கோரிக்கையைச் சமர்ப்பித்தது.

## நேரடிப் பேச்சு நடத்த பாகிஸ்தான் தயாரா?

### ஆப்கானிஸ்தான் கேட்கிறது

வாஷிங்டன், ஜன,3

பாகிஸ்தான் நேரடிப் பேச்சுக்கள் நடத்த முன்வந்தால், ஆப்கானிஸ்தானில் உள்ள சோவியத் துருப்புக்கள் ஒருவருட காலத்தினுள் திருப்பி அனுப்பப்படும்.

இப்படி ஆப்கானிஸ்தான் அரசு திட்டம் ஒன்றை வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் பாகிஸ்தான் குழுவுடன் நடத்திய மறைமுகப் பேச்சு வார்த்தைகளின் போது ஆப்கான் தூதுக்குழு இத் திட்டத்தைச் சமர்பித்ததாகவும், ஆப்கானுடன் நேரடிப்பேச்சுக்களை நடத்த பாகிஸ்தான் மறுத்ததைத் தொடர்ந்து ஆப்கான் குழு அத்திட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாகவும் அமெரிக்காவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரே இத் தகவலை வெளியிட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்த ஒன்றரை லட்சம் சோவியத் துருப்புக்களை விலக்கிக் கொள்வது குறித்து ஒரு கால அட்டவணையை ஆப்கான் அரசு சமர்ப்பித்தது இதுவே முதல் தடவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

பாக்–ஆப்கான் மறைமுகப் பேச்சுக்கள் டிசம்பரில் ஐ.நா. அதிகாரி ஒருவரின் தலைமையில் நடைபெற்றது.

பேச்சுக்களை மார்ச் மாதத்தில் மீண்டும் நடத்துவது என்று இரண்டு குழுக்களும், ஒருவார காலப் பேச்சுக்களின் முடிவில் தீர்மானித்தன.

## டர்பனில் கலவரம்

டர்பன். ஜன.3

தென் ஆபிரிக்காவில் டர்பன் நகரப்பகுதியில் மூண்ட கலவரத்தில் 5 பேர் மரணமடைந்தனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

கடற்கரைப் பகுதியில் மூண்ட இந்தக் கலவரம் கறுப்பர்களுக்கும் டர்பன் நகரப்பகுதியில் வாழும் இந்தியர்களுக்கும் இடையில் மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாதிப்புக்கிலக்கானவர்கள் இந்தியர்கள் என செய்திகள் மேலும் தெரிவித்தன.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# சிமெந்து ஆலை, துறைமுக பகுதி பாதுகாப்பு வலயத்துள் வருமா?

## காங்கேசன் பகுதியில் அச்சம்

காங்கேசன்துறை, ஜன.4

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, துறைமுகம் ஆகியவற்றின் சுற்றுடல் பாகாப்புக்கு உட்பட்ட பிரதேசமாக பிரகடனம் செய்யப்படுமா ?

இப்பகுதி மக்களிடையே இதனால் பெரும் பீதியும், பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் ஹாபர்வியூ ஹோட்டலிலேயே ஆரம்பத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர்.

பின்னர் காங்கேசன் துறை பழைய ஆஸ்பத்திரி கட்டடப் பகுதியை பொலீஸ் நிலையத்திற்கென சுவீகரித்து அங்கு இராணுவ-பொலீஸ் கூட்டுப்படை நிலை கொண்டது.

இதைவிட மேலும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை –காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் சுற்றுடலை உள்ளடக்கும் பெரும்பகுதி பாதுகாப்புக்குட்பட்ட பிரதேசமாக மாறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சுற்றுடலில் ஆலயங்கள் மயானங்கள் உள்ளன. பொதுமக்களும் பலர் வசித்து வருகிறார்கள்.

காங்கேசன்துறை ஐயனார் கோவிலடி, மாங்கொல்லை சிமெந்துதொழிலாளர் விடுதிகள் போன்ற பகுதிகளின் நிலை என்ன? என்று மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

புதிதாக ஏற்படுத்தப்படும் பாதுகாப்பு பிரதேசத்தில் இராணுவத்தினர் கடமையிலிருப்பர் எனவும், சிமெந்து ஆலைக்கு செல்லும் தொழிலாளர் உட்பட இப்பிரதேசத்திற்குள் செல்லும் எவரும் விசேஷ அடையாள கார்ட் வைத்திருக்க வேண்டுமென்ற நிலை உருவாகலாமெனவும் கூறப்படுகிறது.

## துப்பாக்கி ரவையால் உரிமைபறிக்கமுடியாது

யாழ்ப்பாணம், ஜன 4

துப்பாக்கி ரவைகளால் மக்கள் உரிமைகளைப் பறிக்க முடியாது.

மத்திய மாகாண சமாதானக்குழு விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

1985 ஒரு வேதனையான ஆண்டு.

பெற்றோர்களை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வேதனையோடு வாழ்கின்றனர்.

இராணுவத் தீர்வினால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட முடியாது.

அப்படிக் காணப்பட்டால் தமிழர் – சிங்கள உறவில் இன்னும் விரிசல் தான் அதிகமாகும். சமாதானம் ஏற்படவே மாட்டாது.

இப்படி அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## சாவகச்சேரியில் வரி, வாடகை அதிகரிப்பு இல்லாத வரவு செலவுத்திட்டம்

சாவகச்சேரி, ஜன. 4

வரி, வாடகை அதிகரிப்பில்லாத வரவு செலவுத் திட்டத்தை சாவகச்சேரி நகரசபை தயாரித்துள்ளது.

இவ்வாண்டுக்கான உத்தேச வரவு 56,89,380 ரூபாவெனவும் செலவு 56,47,550 ரூபாவெனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வரிஇறுப்பாளர்களுக்கு எவ்விதமான பளுவும் இன்றி தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டத்தில் மின்சாரப் புனரமைப்புக்கு 6 லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் நூல்நிலைய விஸ்தரிப்புக்கு 3 லட்சம் ரூபாவும் ஒதுக்கி உள்ளது.

வீதி திருத்தும் வேலைகள் நகரசபையின் பணம் 2லட்சத்து 20ஆயிரம் ரூபாவுடன் [illegible] 3லட்சத்துடன் மேற்கொள்ளப்படும்.

கண்டி வீதியில் வடிகால் அமைப்பு அரசினர் வைத்தியசாலை வரை 1லட்சம் ரூபா செலவில் நீடிக்கப்படும்.

நுணுவில், சாவகச்சேரி வடக்கு ஆகிய பகுதி மக்களின் வசதிக்காக இரு உப நூல் நிலையங்கள் அமைக்கப்படும்.

பொதுச் சந்தையில் பாவனையாளர் வசதியை முன்னிட்டு புதிதாக மலசலகூடங்கள் அமைக்கப்படும்.

காரியாலயம், சந்தைக் கட்டடம் ஆகியவற்றின் திருத்த வேலைகளுக்கும் பராமரிப்புக்கும் இவ் வரவு செலவுத் திட்டத்தில் 1லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதுடன் மாணவர்களுக்கான புலமைப் பரிசில், பாடபுத்தகம் வழங்கல் ஆகியவற்றுக்கும் பணம் செலவிடப்பட இருக்கிறது.

சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரி

## கொள்ளையின் பின் வகுப்புகள் ஆரம்பம்

அம்பாறை, ஜன.4

கொள்ளைக்கு இலக்கான சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி இரண்டாம் தவணைக்காக நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டது.

சணிசமான மாணவர்கள் கல்லூரிக்கு வருகை தந்திருந்தனர்.

எனினும் தமிழ் விரிவுரையாளர்கள் மாணவர்களின் வரவு மிகவும் குறைந்திருந்தது.

சகல மாணவர்களும், விரிவுரையாளர்களும், அச்சமின்றி விரிவுரைகளுக்கு சமுகம் தந்து கல்லூரி திறம்பட செயற்பட ஒத்துழைப்புத் தரும்படி பதில் அதிபர் ஜனாப் எம். எஸ். மரைக்கார் தம்பி வேண்டுகோள் விடுத்தார்.

தொழில் நுட்ப உபகரணங்கள் கொள்ளை போயிருப்பதால் சில செய்முறை வகுப்புக்களைத் தவிர ஏனைய விரிவுரை வகுப்புகள் அனைத்தும் ஒழுங்காக நடக்கும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

## மக்கள் முகம்

### சிற்றுலய நிர்வாக சபை

மானிப்பாய், ஜன 4

உடுவில் தெற்கு சத்தியபுரம் சிற்றுலய நிர்வாக சபைக் கூட்டம் வண. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வண. டி. சி. இரத்தினசிங்கம்(வட்டாரக்குரு), செயலாளர் திரு. அ. பிரான்சிஸ், பொருளாளர் திரு. வி. ச. இராசதுரை.

நிர்வாக உறுப்பினர்கள் திருமதி த. பேரின்பநாயகம், திருமதி மாரிமுத்து, செல்வி சு. அற்புதராணி, திரு. த. தம்பிராசா.

வாலிப சங்க பிரதிநிதி, செல்வன் சு. சி. மதியாபரணம், கணக்குப்பரிசோதகர் திரு. அ. தேவசகாயம்.

## வவுனியாவில் வீடு கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 4

வவுனியாவில் புதுவருடப்பிறப்பன்று வீடு ஒன்று கொள்ளை இடப்பட்டது.

குசைப்பிள்ளையார் கோவில் என்ற இடத்தில் உள்ள இறைச்சி வியாபாரி கே. காதரின் வீடே கொள்ளை இடப்பட்டது.

1 லட்சம் ரூபா பெறுமதியான டெலிவிஷன், டெக் மற்றும் தங்க நகைகளை இனந்தெரியாத கோஷ்டியினர் கொள்ளை இட்டுச் சென்றனர்.

## வயோதிபர் தற்கொலை

சாவகச்சேரி, ஜன .4

அல்லாரை வடக்கில் ம. கணபதி என்னும் வயோதிபர் (70வயது) நோயின் கொடுமையால் கிருமிநாசினி அருந்தித்தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவரின் மனைவி சின்னம்மா, கிராம சேவகர் திரு. வி. கணபதிப்பிள்ளை ஆகியோர் அளித்த சாட்சியங்களைத் தொடர்ந்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. ந. தர்மேந்திரன் தற்கொலை மரணம் என தீர்ப்பு வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

ஆசைக்குக் காரணம் என்ன? நம்மைத் தவிர இன்னொன்று இருப்பதாக எண்ணுவதால்தான் அதனிடம் ஆசை உண்டாகிறது.

இரண்டு இருப்பதாக எண்ணுவது போய் ஒன்றாகக் காணும் ஞானம் வந்தால் ஆசை இல்லை. எனவே கோபம் இல்லை, எனவே பாபம் இல்லை, எனவே பிறவி இல்லை.

- காஞ்சி முனிவர்.-

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805 22073

04-01-86 த. பெ. 23

## உண்மை உறங்குவதில்லை

பாதுகாப்புப் படையினர் சில சந்தர்ப்பங்களில் தவறு இழைத்திருக்கிறார்கள். இதனை ஒப்புக்கொள்கிறேன்.

இவ்வாறு மெய்வாய் மொழிந்தவர் இலங்கை நாட்டின் முப்படைகளின் கூட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா.

அப்பாவித் தமிழ் மக்களை படையினர் இம்சிக்கிறார்கள் என்பதை மேஜர் ஜெனரல் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளார். இப்போதாவது அதனைச் செய்தாரே என்று நினைக்கத் தோன்றுகிறது.

அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்படுவதை வெளிநாடுகள் கூடக் கண்டிக்கத் தொடங்கி விட்டன. அதற்குப் பின்னரும் உண்மையை முழுக்க முழுக்க மறைக்க இயலாது என்பதைப் படைத் தளபதி உணர்ந்திருக்க வேண்டும்.

அவர் மட்டுமல்ல, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் படையினரின் அட்டகாசத்தைப் புட்டுக் காட்டி விட்டது.

மட்டக்களப்பில் நடந்த சம்பவங்களில் பாதுகாப்புப் படையினர் மக்களின் வீடுகள், மற்றும் சொத்துக்களை நாசமாக்கினர். போராளிகள் நேரடியாக மோதாமல் இருந்த போதும், தாமே மக்களைச் சுட்டனர். ஆனால் இரு பக்க மோதல் நடந்த போதுதான் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று உண்மைக்குப் புறம்பாகச் சாட்சியம் அளித்தார்கள் இவ்வாறு கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இதற்குப் பின்னரும் முழுப் பூசினிக்காயை எப்படிச் சோற்றில் புதைப்பது என்று தளபதி நினைத்திருக்கக் கூடும். எனினும் உண்மையைக் கூறியதுடன் தளபதியின் பணி முடிந்துவிடவில்லை.

கண்காணிப்புக் குழுவும் வெறும் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பயனில்லை.

ஒரு குற்றமும் புரியாத, பாவம் அறியாத தமிழ்ப் பொதுமக்கள் பாதிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

தவறை இழைத்தவர்கள் அதனை உணர்ந்தால் அது பாராட்டுக்குரியது தான். ஆனால் தவறை உணர்ந்த பின்னரும் அதே தவறை மீண்டும் இழைக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் தவறை உணர்ந்தும் ஏது பயன்?

முப்படைகளின் கூட்டுத் தளபதியின் தவறை ஒப்புக்கொள்ளும் அறிக்கைக்குப் பின்னரும், மட்டக்களப்புச் சம்பவங்கள் பற்றிய கண்காணிப்புக் குழுவின் அறிக்கைக்குப் பின்னரும் பாதுகாப்பு அமைச்சர் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

உண்மை உறங்குவதில்லை; அது சாவதும் இல்லை என்பதை இனியாவது மந்திரியார் லலித் உணருவாரா? எத்தனை காலம் தான் உலகை ஏமாற்றலாம்?

தமிழ் மக்களை அழிக்கும் வேலையைத் திட்டமிட்டுச் செய்வதனை வேறு ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிப் பூசி மெழுகலாம் என அமைச்சரோ அரசோ இனி நினைக்கக் கூடாது.

வெறும் குழுக்கள் கமிஷன்கள். அறிக்கைகளால் பயனுள்ள விளைவு ஏதும் கிடைக்கப் போவதில்லை தமிழர் பிரச்சினையின் யதார்த்தத்தை உணர வேண்டும் அதன்பின் அர்த்தமுள்ள தீர்வுக்கு அடியிட வேண்டும். அதுவே எல்லா அநியாய, அக்கிரமங்களும் ஒழிந்து போக ஒரே வழி.

## கிழக்கில் கடல் கண்காணிப்பு வலயம் பொத்துவில் வரை விஸ்தரிக்கப்படும்

மட்டக்களப்பு, ஜன 4

கிழக்குமாகாண கடல் கண்காணிப்பு வலயம் மட்டக்களப்பு பொத்துவில் வரை விஸ்தரிக்கப்படலாமென தெரியவருகிறது.

தமிழ் போராளிகள் இப்பகுதிக்கு ஏனைய இடங்களிலிருந்து கடல் மார்க்கமாக தமது போக்குவரத்துகளை மேற்கொள்வதாக ஆயுதப் படை வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்திருக்கிறதாம். கடல் கண்காணிப்பு வலய விஸ்தரிப்புக்கு முன்னோடியாக கிழக்கு கரையோர மீன்பிடி விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் வாழைச்சேனையில் 40கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட மீன்பிடி துறைமுகம் இம்மாதம் 1ம் திகதி தொடக்கம் ஆயுதபடையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துறைமுக கட்டடங்களில் தற்போது இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டடங்களின் ஒரு பகுதியில் கடற்படையினர் முகாம் அமைக்கப்படுமெனவும் இம்முகாமிலிருந்து பொத்துவில் வரை கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாமென வும் தெரியவருகிறது.

# எம். ஜி. ஆர். பேசுவதில்லை அவரது உள்ளமே இன்று பேசுகிறது

## மூன்றெழுத்தின் மூச்சு உள்ளவரை அலை ஓயாது

**தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மூன்றாவது தடவையாக ஆட்சியைப் பிடித்து ஒரு ஆண்டு பூர்த்தி ஆகின்றது.**

**1977, 1980ஆம் ஆண்டுத் தேர்தல்களிலே பறந்து திரிந்து மேடைக்கு மேடை பேசி, ஆட்சியைக் கைப்பற்றிய திரு. எம். ஜி. இராமச்சந்திரன்,**

**1984 தேர்தலிலே படுத்த படுக்கையாக அமெரிக்காவில் சிகிச்சைபெற்றுக்கொண்டே, தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்.**

**இன்று தமிழக அரசியல் நிலைமை எப்படி உள்ளது?**

**அது பற்றிய ஒரு கண்ணோட்டமே இக் கட்டுரை.**

வந்தார். பேசினார். வென்றார். இது பழைய கதை.

வந்தார். பேசவில்லை. வென்றார் இது புதிய கதை.

புரட்சித் தலைவர் என்று அழைக்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ஆர். இச் சாதனையை அண்மையில் நிலை நாட்டினார்.

படுத்த படுக்கையாய் எம் ஜி. ஆர் இருந்த சமயத்திலேதான் கடந்த ஆண்டு தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் நடந்தது.

எம் ஜி ஆர். அனுதாப அலை, அன்னை இந்திரா அனுதாப அலை — இரண்டும் சேர்ந்துதான், தமிழ் நாட்டில் 'இரட்டை இலை' ஆட்சிக்கு வந்தது என்று கூறியோருக்கு,

டிசம்பரில் நடந்து முடிந்த செய்யாறு இடைத் தேர்தல் சரியானபாடமாக அமைந்து விட்டது

எம். ஜி. ஆரால் சரியாகப் பேசமுடியவில்லை; அலுவல்களைக் கவனிக்க முடியவில்லை. கோப்புகள் எல்லாம் கோட்டையிலே தூங்குகின்றன — இப்படி எல்லாம் மாற்றுக் கட்சியினர் கூறிய கருத்துக்களுக்கு ஆப்பு வைத்தாற் போல் செய்யாறு இடைத் தேர்தல் முடிவு அமைந்து விட்டது.

செய்யாறு தொகுதியில் அண்ணா திராவிட



எம். ஜி. ஆர்.

முன்னேற்றக்கழகம் அடைந்த வெற்றி எம். ஜி. ஆரின் தனி மனித வெற்றி என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

எம் ஜி. ஆரின் மூச்சு இருக்கும்வரை அவரைப் பற்றிய பேச்சு, ஆட்சி என்றும் இருக்கும் என்பதை நிரூபித்து விட்டது, செய்யாறு.

செய்யாறு தொகுதியில் அ. தி. மு. க வேட்பாளருக்கும் தி. மு. க வேட்பாளருக்கும் இடையே கடும் போட்டி என்று முதலில் எண்ணப் பட்டது.

டிசம்பர் 12ஆம் திகதி வரை அப்படித்தான் இருந்தது.

அ. தி. மு க அமைச்சர்கள் கூடாரம் இட்டு, பட்டி தொட்டிகளில் எல்லாம் சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டு இருந்தும் எடுபடவில்லை டிசம்பர் 13 ஆம் திகதி. அதுவும் வெள்ளிக் கிழமை

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர், வள்ளி திருமணத்திலே கலந்துகொண்டார்.

திகைக்கின்றீர்களா? செய்யாறு தொகுதியின் முன்னாள் அ. தி. மு. க எம். எல். ஏ. திரு. கே. முருகனின் மகள்தான் வள்ளி.

திரு. முருகன் காலமானதைத் தொடர்ந்து தான் செய்யாறு இடைத் தேர்தலேநடைபெற்றது.

டிசம்பர் 16 இடைத் தேர்தல்.

தீபன்ராஜா

டிசம்பர் 13ல் வள்ளி திருமணம்.

முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் 'மைக்' கின் முன்னால் வந்தார். சில வார்த்தைகளாவது பேசுவார்என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். மக்கள் ஆர்ப்பரித்தனர்.

அவர் கையை உயர்த்தி இரண்டு விரல்களால் 'வி' வெற்றிச் சின்னத்தைக் காண்பித்தார். புன்சிரிப்பைத் தவழ விட்டார்.

இரண்டு விரல்களைச் சுட்டிக் காட்டியது, வெற்றிச் சின்னமாக மட்டும் விளங்கவில்லை; இரட்டை இலைச் சின்னமாகவும் மக்கள் எடுத்துக் கொண்டார்கள்.

குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் சாதாரண மக்கள் மத்தியில் அடைந்த பிரபலம், செய்யாறு தொகுதியில் தெளிவாகத் தெரிந்தது.

''எங்கள் குழந்தைகளை இன்று வளர்ப்பவர் எம். ஜி. ஆர்தான்.

''உணவு, உடை தருபவரே எம் ஜி. ஆர்தான்''

இதுதான் தமிழ்நாடு கிராமங்களில் வாழும் லட்சோப லட்ச பெண்களின் வாய்களில் வரும் வார்த்தைகள்.

இவ் வார்த்தைகளே, வாக்குகளாக செய்யாறு தேர்தலில் அ. தி. மு கவுக்குக்கிடைத்தன.

1984இல் அ தி. மு. க வேட்பாளருக்குக் கிடைத்த பெரும்பான்மை 16, 540 வாக்குகள்.

இது எம். ஜி. ஆர், பேசி எடுத்த பெரும்பான்மை.

1985இல் கிடைத்த பெரும்பான்மை 21, 368 வாக்குகள்.

இது எம். ஜி. ஆர், பேசாமல் எடுத்த பெரும்பான்மை.

உள்ளத்தைக் கவர்ந்த தலைமைதான் வேண்டும் என்று தமிழக மக்கள் விரும்புகிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

தமிழக மேடைகளில் எம். ஜி. ஆர். இன்று பேசவில்லை.

அவரின் உள்ளம் பேசுகின்றது.

தமிழகத்தில் அனுதாப அலை வீசவில்லை.

எம். ஜி. ஆரின் அலை தான் வீசுகின்றது.

மூன்றெழுத்தின் மூச்சு இருக்கும்வரை, எம். ஜி. ஆர் அலை ஓயாது.

இதுதான் இன்றைய தமிழக அரசியல்நிலைமை.

## பொய்யாமொழி



**குறள்:**

அறத்தான் வருவதே இன்பம்மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

**பொருள்:**

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும்; அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை.

## ஆசிரியர் ஏமாற்றம்

அச்சுவேலி, ஜன 4

ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்துவதற்குச் சென்ற ஆசிரியர்களில் சிலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

யாழ். மாவட்டத்தில் டிசம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 5 ஆம் திகதி வரை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சை விடைத்தாள் திருத்தும் வேலையில் ஆசிரியர்களில் சிலருக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

27ஆம் திகதி அவர்கள் தமது நிலையங்களுக்குச் சென்றிருந்த போதிலும் அவர்களுக்கு உரிய பதவி பொறுப்பு நிரந்தரமற்றதாகஇருந்ததால்விடைத்தாள் திருத்தும் வேலை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மூதூரில் நடந்த நத்தார் பயங்கரததை அறிந்து ஒரு முஸ்லிம் பிரஜையின் உள்ளம் குமுறுகிறது

# முஸ்லிம் சமுதாயத்தில் உள்ள உலுத்தர்களை இனம் காணுக

## அவர்களால் முழுச் சமுதாயத்துக்கும் அவப்பெயர்

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பகுதியில் ஊர்காவல் படை வீரர்களாகப் பணிபுரிந்த சில முஸ்லிம்கள், அப்பாவித் தமிழ் இளம் பெண்கள் மீது நடத்தியதாகக் கூறப்படும் படுபாதகமான பயங்கரச் செயல்கள்,

நீதி;நியாயம், நல்ல உள்ளம் படைத்த முஸ்லிம் பெருமக்களைப் பதறச் செய்துவிட்டன.

அப்படி மனங்கலங்கிய அன்பர் ஒருவர் தனது உள்ளக் குமுறலை இக்கட்டுரையில் வெளிப்படுத்தி உள்ளார்.

''விசுவாசிகளே! நீத்ததை நிலை நாட்டுவதில், அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒரு சாரார்மீது (உங்களுக்கு)உள்ள துவேஷம், (அவர்களுக்கு) அக்கிரமம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கவும், (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் பரிசுத்தத் தன்மைக்கு மிக நெருங்கியது (எத்தகைய சந்தர்ப்பங்களிலும்) நீங்கள் அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான்''

''சூரா அல்மாயிதா வசனம் 8''

இது இறைவசனம். சிந்திக்கக் கூடிய மனிதனை தெளிவு பெறச் செய்யும் வசனம். நீதி நிலைத்திட, துவேஷம், குரோதம் அகன்றிட முஸ்லிம் சமூகத்தினரை எச்சரிக்கை செய்யும் வசனம். துவேஷம், குரோதம் தான் அக்கிரமம் செய்வதற்கு மூல காரணம். வன்செயல்கள் நடைபெறுவதற்கு அவை வழிவகுக்கும்.

ஆணவம், அகங்காரம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமை, வரட்டுக் கௌரவம்,நான் என்ற மமதை, உயிர்களை உயிராக மதிக்காத தன்மையை சிந்திக்கக்கூடிய மனிதன் சிந்திக்காமல் விடுவதால் உயிர் [illegible] அழிக்கப்படுவது சர்வ [illegible] இல் நடைபெறுவதை நாம் காணுகின்றோம்.

துவேஷம், குரோதம், வன்செயல்கள் ஏற்படுவது சிறு அற்ப விஷயங்களைக் கொண்டு தான். இவைகளால் நாடு நலிவடைகின்றது. பொருளாதாரம் சீர் கெடுகின்றது. சமூகம் பிளவு படுகின்றது. சமூகத்தின் பிளவை அகன் தாக்கத்தை லெபனானில், இந்திய மாநிலங்களில், தென் ஆபிரிக்காவில் ஈரான், ஈராக்கில் ஏன் நம் நாட்டில் கண் கூடாகக் காணுகின்றோம்.

பல ஆண்டுகளின் பெறுபேறு பல்லாயிரம் உயிர்கள் பலி, பல்லாயிரம் கோடி டாலர் பெறுமதியான சொத்துக்கள் நாசம், நாடுகள் வளர்ச்சியில் பல்லாண்டு காலமாகப் பின் தள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட திருமறையின் திரு வசனங்கள் முஸ்லிம் சமுதாயம் இக்கால கட்டத்தில் பிற [illegible] எப்படி நடந்து கொள்ள வேண் [illegible] தெளிவு படுத்துகின்றன.

நீதிக்குரியவன் அல்லாஹ். நீதியுள்ள மனிதர்களை நேசிக்கின்றான். ஒருமுறை நபிமுஹம்மது (ஸல்) அவர்களிடம் இப்படிக் கேட்கப்பட்டது. ''நபியே! உங்கள் மகள் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டாலும் அவளுக்குரிய தண்டனை என்ன!'' ''இஸ்லாமிய சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. நபியுடைய மகளாயிருந்தாலும் குற்றம் குற்றமே! அவளுடைய கைகள் துண்டிக்கப்பட வேண்டும்'' என்றார்கள்.

யாருமறியாமல் விபசாரத்தில் ஈடுபட்டவள் அப் பெண். கரு அவள் வயிற்றில் வளர்ந்தது. மனச்சாட்சி அவளை வலியுறுத்தியதால் நபி முஹம்மது (ஸல்) அவர்களிடம் வந்து தான் செய்த பாவத்தையிட்டு முறையிட்டாள்.

இஸ்லாமிய நீதி சாகக் கூடாது. குழந்தை பிறந்தபின், அக் குழந்தைக்குப் பாலூட்டி பறக்கடித்தபின் நபியவர்களால் கல்லெறிந்து கொல்லும்படி கட்டளையிடப்பட்டது.

இவ்விதிமுறைகள் நபியவர்களின் காலத்துக்குப் பின்வரும் அன்றைய ஆட்சியாளர்களால் கடைப் பிடிக்கப்பட்டன. இன்றும் அரபுநாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

எமது நாட்டில், இஸ்லாமிய ஆட்சிமுறை இல்லாததால் இத்தகையசட்டங்கள் அமுல் நடத்தப் படுவதில்லை. அதனால் முஸ்லிம்கள் தங்கள் பாவச் செயல்களுக்குரிய தண்டனையைப் பெறாமல் தப்பிவிடுகிறார்கள்.

அதனால், துணிந்து தன்னிலை மறந்து பாவங்கள் செய்வதில் முனைந்து விடுகின்றார்கள். அதன் காரணமாகத்தான் நாட்டின் சில பகுதிகளில் நடந்து முடிந்த சில சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்தையே தலைகுனிய வைத்து விட்டன. முஸ்லிம் சமூகம் அதற்காக வேதனைப்படுகிறது.

மனு நீதிக்கு புறம்பாக எவர் முஸ்லிம் சமூகத்தில் இருந்து கொண்டு செயல்பட்டாலும் அவரை முஸ்லிமாக ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அபயம் தேடி வந்தவர்களை, ஆதரித்த சமுதாயம் முஸ்லிம் சமுதாயம்.

இனக்கலவரங்கள் ஏற்பட்டபோதுஎத்தனையோ உயிர்களைப் பாதுகாத்தது. நல்ல பெயரையும் வாங்கியது ஒரு சில உலுத்தர்கள் புரிந்த பாதகங்களால் அவப் பெயர் ஏற்பட்டு விட்டதை எமது சமுதாயம் உணர வேண்டும். உலுத்தர்களை இனங்கண்டு சமுதாயத்திலிருந்து அவர்களை நிர்மூலமாக்கி விட வேண்டும்.

ஜனாப் அகுமது கரீம் அக்பர் ஜின்னா

(4-ம் பக்கம் பார்க்க)

## வித்தாரம்

என்ன, இண்டைக்குச் சனிக்கிழமை. காலையிலையே முழுகிவிட்டாய் போலை. அப்பிடித்தானே முரளி! நீ அதிலை வலு கவனம். ஓ. இப்ப என்ன ஷம்பு முழுக்குத்தானே!

முந்தின காலமெண்டா வெல்லோ காலையிலை எழும்பி நல்லெண்ணெய் வைத்து உடம்பெல்லாம் தேய்ச்சு, அரப்புத் தேசிக்காய் அவிச்சு முழுகிறது. இப்ப அரப்பும் இல்லை மழுக்கும் இல்லை. நான் சின்னனா இருக்கைக்கை எங்கடை பேரனார் சனிக்கிழமை எண்டா முழுகாமல் இருக்கமாட்டார்.

மேனி மினுமினுக்க நல்லெண்ணையைத் தேய்ச்சுப்போட்டு, மணித்தியாலக் கணக்காக அது இது எண்டு ஏதாவது சின்ன வேலை செய்து நேரத்தைக் கடத்துவார். பிறகு கிணத்தடிக்குப் போனார் எண்டால் பன்னிரண்டு மணிக்குச் சாப்பிடுறதுக்குக் கணக்காக வருவார். வந்து கத்தரிக்காய் கறியிக்கை இல்லாட்டா நல்ல மிளகு சீரகம் போட்டு அரைச்ச கூட்டுக் குழம்புக்கை நல்லெண்ணெயை ஊத்திக் குடிப்பாரடா அப்பா!

நாங்கள் நீங்கள் அப்படிச் சாப்பிடுறோமே. அந்தக் காலத்து ஆக்கள் எள்ளு; குரக்கன், உழுந்து எண்டு நல்ல சத்தான சாப்பாட்டைச் சாப்பிட்டுதுகள். தேகசுகம் மட்டுமென்ன திடகாத்திரமாகவும் இருந்ததுகள். இப்ப நாங்கள் உந்த அமெரிக்கன் மாவிலை பேக்கறியிலை அவிச்சு விக்கிற பாணைத் திண்டு காலத்தைக் கழிக்கிறம். பிறகு எப்பிடிச் சுகதேகிகளா இருக்கிறது?

தலை இடி, காய்ச்சல், பிளட் பிறசர், கிட்னி றபிள், ஹாட் அற்றுக் துறம்போசிஸ் அப்பிடி இப்பிடி எண்டு எங்களுக்கு எத்தனை வியாதி. எத்தனை விதமான இங்கிலீசு மருந்துகள்.

புதுக்க, புதுக்க ஒவ்வொண்டு வரப் பழசுகளை மறந்து போறம்.

சனிக்கிழமை எண்டு சொல்ல வந்து உந்த விளக்கம், வியாக்கியானம் எல்லாம் பேசிப்போட்டன் எண்டு நினைக்கிறியாக்கும். பழமை பேணினுத்தாண்டா தம்பி எங்கடை பண்பாடு காக்கப்படும். இதனை நீங்கள் தெரிஞ்சாவது வைத்திருக்க வேண்டாமே.

இண்டைக்கு சனிக்கிழமை எண்டு நினைச்சதே யாழ்ப்பாணத்துக்கு உந்தக் கண்காணிப்புக் குழு வருகிறதாலை தான்.

காரைநகர், பொன்னாலை, அரியாலை, கொழும்புத்துறை, சுதுமலை ஆகிய இடங்களிலை நடந்த சம்பவங்களைப் பற்றி விசாரிக்கத் தான் உவை வருகினமாம்.

சாகிறவனைச் சாகாமல் காப்பாற்றுவதற்கு வைத்தியம் செய்வதுதான் நல்லது. அதைவிட்டுவிட்டு அவன் செத்த பிறகு உடம்பிலை என்ன கோளாறு எண்டு பாக்கிறதுக்கு பிரேத பரிசோதனை நடத்தி என்ன பிரயோசனம். அப்பிடிச் செய்யிறதாலை செத்தவனை உயிர்ப்பிக்க முடியுமே?

முந்தின காலத்திலை அதாவது இராமர் காலத்திலை எண்டால் சாகிறவனை உயிர்ப்பிக்கச் சஞ்சீவி மருந்தாவது இருந்திது. இப்ப அப்படி ஒரு மருந்துமில்லை.

உந்தக் கண்காணிப்புக் குழு பிரேத பரிசோதனை வேலை தானே பாக்குது. அதாலை ஏதோ பெரிய பிரயோசனம் எண்டு நான் நினைக்கயில்லை. அதை விட்டுத் தள்ளு!

நேற்றைக்கு கந்தோரிலை இருந்து அவசரத்துக்குக் கூட டெலிபோன் எடுத்துப் பேச முடியேல்லை. ஒருத்தர்பேசி முடிஞ்சுது எண்டு நிச

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிற்மன் சுட்டச்சு சுருக்கெழுத்து
90 மணிநேர துரித பயிற்சி
BOOK - KEEPING
SPOKEN ENGLISH
தொடர்புகள்: நிர்வாகி சங்கர்
J. E. C.
(சாந்தி சினிமா முன்)
யாழ்ப்பாணம்.
கிளை: பிறிலியன் அக்கடமி
பருத்தித்துறை—நெல்லியடி.

உதயன்
04-01-1986

86, பங்குனி முதற்கிழமை
நடைபெற உள்ள
பிற்மன் லண்டன் பரீட்சைகள்
90மணி நேர - தட்டச்சு, சுருக்கெழுத்து
BOOK - KEEPING வகுப்புக்கள்
யாழ்நகரில் எமது நிறுவன J. E. C மேல் மாடியில் பரீட்சை நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்)

★ 4 விக்கெட் இழப்புக்கு

# 600 ஓட்டங்கள் இந்தியா குவித்தது

## சிறிகாந்த், கவாஸ்கர், அமர்நாத் செஞ்சுரி!

## இந்தியா சாதனை; ஆஸ்திரேலியாவுக்கு சோதனை

சிட்னி, ஜன. 4

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது இறுதி டெஸ்ட் ஆட்டம் ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் சோதனையாக அமைந்து விட்டது.

இரண்டாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணியை மழை காப்பாற்றியது. மூன்றாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணியை தோல்வியிலிருந்து காப்பாற்றப் போவது யார்?

மீண்டும் மழை; அல்லது ஆஸ்திரேலிய வீரர்களின் அமைதியான நிதானமான துடுப்பாட்டந்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

இன்றைய ஆட்டம் ஆஸி வீரர்களுக்குச் சோதனைக்களமாக அமையப்போகிறது.

நிதானமாக — ஓட்ட எண்ணிக்கையில் கவனம் செலுத்தாமல்—விக்கெட் இழப்புகளைமுடிந்தவரை தவிர்த்து — கூடியவரை ஆட்டக்களத்தை ஆக்கிரமித்து நின்று ஆட்ட நேரத்தை விரயமாக்கினால் மட்டுமே ஆஸ்திரேலிய அணி தோல்வி ஏதும் ஏற்படக்கூடிய நிலையைத் தவிர்க்க முடியும். அதன் மூலம் இந்த டெஸ்டையும் டெஸ்ட் தொடரையும் வெற்றி தோல்வியின்றி முடிக்க முடியும்.

கடந்த இரண்டு நாள் ஆட்டத்தில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் நடத்திக்காட்டிய 'விளாசல்'கள் இந்த நிலையைத் தான் தோற்றுவித்திருக்கின்றன.

நேற்றும் அதற்கு முன்தினமும் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய வீரர்களின் துடுப்பக்கு நிலைகுலைந்திருக்கும் ஆஸி அணி இன்று சோதனையை எதிர்நோக்கப் போகிறது.

இந்திய அணித்தலைவர் கபில்தேவின் சூறாவழி பந்து தாக்குதலகளுக்கும் —

இந்தியாவுக்கே தனி உரித்தான சுருள் பந்து வீச்சுக்கும் ஆஸி ஈடு கொடுக்க முடியுமா என்பது இன்றைய ஆட்டத்தில் தெரியும்.

முதல் நாள் ஆட்டத்தில் ஒரு விக்கெட் இழப்பக்கு 334 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி நேற்றைய ஆட்டத்திலும் தொடர்ந்து நொருக்கித் தள்ளியது.

சாதனை மன்னன் கவாஸ்கர் 132 இலிருந்த தமது ஓட்ட எண்ணிக்கையை 172க்கு உயர்த்தியபின்னர் ஆட்டமிழந்தார்.

இந்திய தரப்பில் மூன்றாவது செஞ்சுரியை மொகிந்தர் அமர்நாத் அடித்தார். அவர்பெற்ற ஓட்டங்கள் 138.

முதல்நாள் ஆட்டத்தில் சிறிகாந்த 116 ஓட்டங்கள் எடுத்தது தெரிந்ததே.

இந்திய அணித்தலைவர் கபில்தேவ் 'வெண்கலக் கடைக்குள்புகுந்த யானை மாதிரி' ஆஸி பந்து வீச்சுகளை நாலாபுறமும் திக்கு திசையின்றி சிதற அடித்தார். குறுகிய நேரத்தில் அவர் குவித்த 42 ஓட்டங்கள் நேற்றைய ஆட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

அவருக்குப் பின்னர் முகம்மது அஸாருதீன், டிலிப் வெங்சர்கார் ஆகியோர் இந்தியாவின் நிலையை மேலும் உயர்த்தினர். அஸாருதினின் பளிச்சிடும் 58 ஓட்டங்களும், வெங்சர்காரின் ஆணித்தரமான 37 ஓட்டங்களும் இந்தியா நாலு விக்கெட் இழப்புக்கு 600 ஓட்டங்களைப் பெற உதவின. இவர்கள் இருவரும் ஆட்டம் இழக்கவில்லை.

அந்த நிலையில் இந்திய அணித் தலைவர் தம்பக்க துடுப்பாட்டத்தை நிறுத்தினார். ஆஸி வீரர்களை துடுப்பாடக் களத்துக்கு அழைத்தார்.

நேற்று ஆட்டநேரம் முடிந்தபோது ஆஸி அணி விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களைமட்டும் பெற்றிருந்தது.

இந்திய அணி நேற்று பெற்ற 600 ஓட்டங்கள் தான் டெஸ்ட் சரித்திரத்தில் அது ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக எடுத்த அதி உச்ச எண்ணிக்கையும் வேகமாக சேர்த்த மொத்த ஓட்டமும் ஆகும்.

இன்றைய ஆட்டம் ஆஸிக்கு சோதனையானது. ஆஸி அணியின் துடுப்பு ஆட்டம் இன்று தடுப்பு ஆட்டமாக இருந்தால்தான் அது ஓரளவு தன்னுடைய நிலையை ஸ்திரப்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

இந்த டெஸ்டில் இன்னும் மூன்றுநாள் ஆட்டம் பாக்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு அரங்கு

## 3 தொன் போதைவஸ்து சிக்கியது!

பம்பாய், ஜன. 3

3 மெட்ரிக் தொன் ஹாஷிஷ் என்ற போதை வஸ்து கப்பல் கொள்கலனுக்குள் இருந்து சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

பம்பாய்த் துறைமுகத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

போதை வஸ்து இருந்த கொள்கலனில் இரசாயனப் பாருள்கள் என்று லேபலிடப்பட்டிருந்தது.

மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்படுவதற்கு கப்பலில் இது ஏற்றப்பட்டிருந்தது.

பெங்களூரில் இருந்து இப்போதை வஸ்து பம்பாய் கொண்டு வரப்பட்டதாம்.

இப்பார்சலை அனுப்பிய பெங்களூர் நிறுவனம் ஒன்றின் அதிகாரி ஒருவரை இது சம்பந்தமாக பொலிஸார் தேடுகின்றனர்.

இக்கடத்தல் முயற்சியில் சர்வதேசக் கடத்தல் கோஷ்டி சம்பந்தப் பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் கருதுகின்றனர்.

இவ்வளவு பெருந் தொகையாக போதை வஸ்து அகப்பட்டது இந்தியாவில் இதுவே முதல் தடவை.

## சிங்கள ஊர்காவல் படைவீரர் சுட்டுக் கொல்லப்பட்டார்

### இன்னொருவர் மயிரிழையில் தப்பினார்

திருகோணமலை, ஜன. 4

சேருவில என்ற இடத்தில் ஒரு சிங்கள ஊர்காவல் படை வீரர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் மயிரிழையில் உயிர் தப்பிய இன்னொரு சிங்கள ஊர்காவல் படை வீரர், மரண விசாரணையில் சாட்சியமளித்தார்.

திருகோணமலை பதில் நீதவான் திரு. எம். கே. செல்வராசா மரணவிசாரணை நடத்தினார்.

ஜி பொடியப்புஹாமி என்ற ஊர்காவல் படைவீரர் சொன்னதாவது:-

இறந்தவரும் நானும் ஊர்காவல்படை வீரர்கள் சேருவிலவில் உள்ள சிங்களவர் அகதி முகாமில் இருவரும் கடமை புரிந்து வந்தோம்.

ஜனவரி 2 அம் திகதி காலை 7 மணி அளவில் சேனையில் உள்ள வீட்டுக்கு இருவரும் சென்றோம். எம் வீடுகளை மூவர் கொள்ளை அடித்துக் கொண்டு நின்றனர்.

எம்மைக் கண்டதும், அவர்கள் வந்து. "நாம் முஸ்லிம்கள். உங்கள் பொருள்களைக் கொள்ளை இடமாட்டோம். காட்டுக்குள் கொஞ்சம் உங்கள் பொருள்கள் உள்ளன" என்று கூறினர்.

பின்னர் எம்மை அழைத்துக் கொண்டு காட்டுப்பகுதிக்குள் சென்றனர்.

அங்கு வைத்து மேலும் ஆறுபேர் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

எல்லாருமாக பின்னர் எம் இருவரின் கைகளில் இருந்த துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டனர்.

நான் எப்படியோ தப்பித்துக் கொண்டேன்

தப்பி ஓடி வருகையில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. இராணுவ முகாமில் போய் முறையிட்டேன்.

இராணுவம் தேடுதல் நடத்திய சமயம் காட்டினுள் இறந்தவர் சடலமாகக் கண்டு பிடிக்கப் பட்டார்.

இப்படி சாட்சி கூறினார்.

கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## பருத்தித்துறையில் மினிவான் போராட்டம் இல்லை

### கடத்தப்பட்ட வான் கண்டுபிடிப்பு

நல்லூர், ஜன, 4

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் மினிவான் சேவை நேற்று வழமை போல் நடந்தது.

சேவை இடைநிறுத்தம் நடக்கவில்லை.

கடந்த திங்கட்கிழமை கடத்திச் செல்லப்பட்ட மினிவான் நேற்றுக்காலை வண்ணைத்திப் பாலத்திற்கருகே கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்தே மினிவான் சொந்தக்காரர்கள் நேற்று நடத்த இருந்த தமது போராட்டத்தைக் கைவிட்டார்கள்.

கடத்தப்பட்ட மினிவானை வியாழக்கிழமைக்கு முதல் திருப்பி ஒப்படைக்கும் படியும், இல்லையேல் வெள்ளிக்கிழமை மினிவான் சேவைகள் நிறுத்தப்படும் எனவும் பருத்தித்துறை மினிவான் சங்கத்தினர் அறிவித்திருந்தனர்.

## லக்ஷ்மன் ராஜினமா..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பி வந்த கையோடு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்தார்.

"எம். பி. பதவியை ராஜினமாச் செய்கின்றேன், நீங்கள் அத்தனகல்லை எம்பியாக வாருங்கள்" என்று அப்பொழுது திரு. ஜயக்கொடி, திருமதி பண்டாரநாயக்காவைக் கேட்டுக் கொண்டார்.

'சிட்' எம்பியாக வரத் தனக்கு விருப்பம் இல்லை என்று திருமதி பண்டாரநாயக்கா மறுத்து விட்டாராம்.

எம். பி ஒருவர் பதவியை ராஜினமாச் செய்தால், குறிப்பிட்ட காலத்தினுள் எம். பி சார்ந்து இருந்த அரசியல் கட்சி நியமனம் மூலம் இன்னொருவரை எம். பி ஆக்கலாம்.

அந்த காலக்கெடு, காலாவதியாகி விட்டால் இடைத்தேர்தல் ஒன்று மூலம் தான் அந்தத் தொகுதிக்கு எம். பி தெரிவு செய்யப்படுவார். அரசமைப்புச் சட்டம் இப்படிக் கூறுகின்றது.

இதனைப் பயன்படுத்தி திரு ஜயக்கொடி ராஜினமாச் செய்தவுடன், அத்தனகல்லைத் தொகுதிக்கு 'சிட்' மூலம் எம்பி நியமனம் செய்யாமல், இடைத்தேர்தல் ஒன்றை நடத்த வாய்ப்பளிக்கலாம்.

அந்த இடைத் தேர்தலில் பொதுத் தேர்தலை நடத்துக என்ற கோரிக்கையை முன்வைத்து திருமதி பண்டாரநாயக்கா போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட எம். பி ஆகலாம்.

அத்துடன் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற இயக்கமும் முழு வேகம் பெற்றதாகவும் மாறும்.

இப்படி சுதந்திரக் கட்சியின் வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றதாம்.

## அக்கரை...

(1-ம் டக்கத் தொடர்ச்சி)

மிரட்டி அவர்களிடம் இருந்த நகைகளை அபகரித்தனர். நகைகளின் பெறுமதி 30,000 ரூபா என மதிப்பிடப்படுகிறது. பின்னர் விடுதியில் எல்லா அறைகளையும் சோதனை போட்டனர். அப்போது சுமார் 15,000 ரூபா ரொக்கப் பணத்தைக் கொள்ளையிட்டனர்.

## கடத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 4

வவுனியா– ஹொரவப் பொத்தானை வீதியில் வெளிக்குளம் என்ற இடத்தில் இனந்தெரியாத நபர்களினால் சிங்கவர் ஒருவரின் டிராக்டர் ஒன்று கடத்தப்பட்டது.

## ஜனவரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியம் வழங்கப்படும் நாட்கள் வருமாறு:-

13-1-86: யாழ்ப்பாணம்
நெடுந்தீவு
அனலைதீவு
நயினா தீவு
கொடிகாமம்
15-1-86 அச்சுவேலி
அளவெட்டி
காரைநகர்
வேலணை
சங்கானை
16-1-86 சுன்னாகம்
உரும்பராய்
கோப்பாய்
வண்ணார்பண்ணை
17-1-86: கரவெட்டி
காங்கேசன் துறை
வல்வெட்டித் துறை
ஊர்காவற் துறை
20-1-86 : பருத்தித் துறை
மானிப்பாய்
வயாவிளான்
சுழிபுரம்
21-1-86: சாவகச்சேரி
வட்டுக்கோட்டை
கொக்குவில்
கைதடி
22-1-86: யாழ்ப்பாணம்
தெல்லிப்பளை
பண்டத்தரிப்பு
புங்குடுதீவு.

## மாமிகசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நடத்துவதில் தான் தங்கியுள்ளது என்று திருமதி பண்டாரநாயக்கா கூறுகினறார்.

இன்று அனுராதபுரத்திலேயே தேர்தலை நடத்த முடியாமல் உள்ளது. அப்படி இருக்க எப்படி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நடத்துவது?

அப்படி நடந்தால் திருமதி பண்டாரநாயக்கா அனுராதபுரத்தில் போட்டியிட முன்வருவாரா?

இப்படி திரு. குமாரணதுங்கா கேட்டார். இதற்கிடையில் "இனப்பிரச்சினைக்குத் தீர்வு முதலில் காணப்பட வேண்டும். அதன் பின்னர் தான் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்"

இப்படி சமசமாஜக் கட்சித்தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் பீட்டர் கெனமன் ஆகியோரும் கருத்து வெளியிட்டனர்

## லண்டன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள், நூல்நிலையங்கள் ஆகியனவற்றுக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக நூல்களை விநியோகிக்க லண்டன் றன்பேர்லி நூல் நிலைய சேவை இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் திரு ஸ்ரீபாஸ்கரன் சொன்னார்.

## ★ கவாஸ்கரின் சாதனைப் பட்டியல்!



சிட்னி ஜன. 4

கிரிக்கெட் உலகில் சாதனை மன்னன் என்று புகழப்படுபவர் இந்திய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சுனில் கவாஸ்கர்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களுக்கு அவர் ஒரு முன்மாதிரி.

பொறுமையாக பந்தை எதிர்கொள்ளுதல்; நிதானம் தவறாமல் பந்தை அடித்தல்; ஓட்டத்தைக் குவிப்பதில் அவசரமின்மை; பந்து வீச்சின் வேகத்தையும் போக்கையும் நன்கு பழகிக் கொள்ளும்வரை பந்தை எதிர்கொள்வதைத் தவிர்த்தல்; ஆட்டமிழக்காமல் ஆட்டக்களத்தைத் தொடர்ந்து ஆக்கிரமித்து நிற்க வேண்டும் என்ற தில் விடாப்பிடியான மனப்பான்மை; பந்துவீச்சை நன்கு அவதானித்து அதற்கு ஏற்றவாறு வேகமாக-சரியான முடிவை மேற்கொண்டு எதிர்நடவடிக்கை எடுத்தல்; தன்னுடைய ஆட்டத்தில் அதீத நம்பிக்கை வைத்தல் — இவைதான் அவரது வெற்றிக்கு இரகசியம்.

அவரது பெறுபேறுகளே அவர் நிகழ்த்திய சாதனைகளுக்குச் சான்று. அவற்றை இங்கு தொகுத்துத் தருகிறோம்:

* டெஸ்ட் கிரிக்கெட் சரித்திரத்தில் அதிக செஞ்சுரிகளை 32 செஞ்சுரிகளை அடித்தவர்.
* அதிக ஓட்டங்களை — 9178 ஓட்டங்களை — குவித்தவர் (8000 ஓட்டங்களுக்கு மேல் தாண்டிய மற்றைய இரண்டுபேர்—ஜியோவ் போய்கொட், ஸோபர்ஸ்.)
* ஆயிரம் ஓட்டத்தை 11ஆவது டெஸ்டிலும், 2 ஆயிரத்தை 23 ஆவதிலும், 3 ஆயிரத்தை 34 ஆவதிலும், 4 ஆயிரத்தை 43 ஆவதிலும், 5 ஆயிரத்தை 52 ஆவதிலும், 6 ஆயிரத்தை 65 ஆவதிலும், 7 ஆயிரத்தை 80 ஆவதிலும், 8 ஆயிரத்தை 95 ஆவதிலும், 9 ஆயிரத்தை 110 ஆவது டெஸ்டிலும் அவர் தாண்டினார்.
* அவர் பெற்ற செஞ்சுரிகள், ஓட்டங்கள், எதிராக விளையாடிய அணி ஆகியவைபற்றிய புள்ளி விவரம் வருமாறு :-

| அணி | டெஸ்ட் | செஞ்சுரிகள் | ஓட்டங்கள் |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 16 | 7 | 1331 |
| மேற்கிந்தியா | 27 | 13 | 2749 |
| இங்கிலாந்து | 35 | 4 | 2308 |
| பாகிஸ்தான் | 20 | 5 | 1794 |
| நியூசிலாந்து | 9 | 2 | 651 |
| இலங்கை | 4 | 1 | 345 |
| | 111 | 32 | 9178 |

* கவாஸ்கர் 111 டெஸ்டுகளில் 192 இன்னிங்ஸ் துடுப்பெடுத்தாடியிருக்கிறார், அவற்றில் 16 தடவைகள் அவர் ஆட்டமிழக்கவில்லை. ஒரு இன்னிங்ஸில் அவர் பெற்ற அதிக ஓட்டங்கள்—ஆட்டமிழக்காமல் பெற்ற 236 ஆகும். 9178 ஓட்டங்கள் பெற்ற கவாஸ்கரின் சராசரி ஓட்ட எண்ணிக்கை ஏறத்தாழ 53 ஆகும்.

எமது புதிய வெளியீடுகள்
★ சாருஹாசன் — லட்சுமி
"தவம்"
(V. G. P. ORIGINAL)
★ பாக்கியராஜ் — கல்பனா
"சின்னவீடு"
(THOMSUN ORIGINAL)
★ K. R. ராமசாமி — சாவித்திரி
"சுகம் எங்கே"
(V. G. P. MASTER)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

## விததாரம....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வரை வைச்சதுதான் தாமதம் டெலிபோன் றீங், றீங் எண்டு பிறகும் அடிக்குது. என்ன விஷயம் எண்டு முழிக்கிறியே. உன்ரை கண்ணும் நீயும்.

சிட்னியிலை நடக்கிற அவுஸ்திரேலிய – இந்திய கிரிக்கெட் டெஸ்ட் போட்டி பற்றி முடிவுகளையும், விளக்கங்களையும் கேட்கிறதுக்காகத் தான் அத்தனை டெலிபோன் கோலுகளும்.

கொழும்பிலை செய்யயிக்கை டெலிபோன் கோல் வந்த மாதிரி உதயனுக்கும் வந்து ஃப்பா. யாழ்ப்பாணத்திலும் இத்தனை விளையாட்டு விசிறிகளோ எண்டு நான் மலைச்சுப் போனேன்.

இத்தினை நாளா உந்த விளையாட்டு விசிறிகள் தங்களுக்கு விருப்பமான செய்தியைப் படிக்க கொழும்பு இங்கிலீஷ் பேப்பர்களைத் தானே வாசிக்க வேண்டி இருந்தது.

இப்ப உதயன் உதிச்ச பிறகுதான் தமிழ்ப் பேப்பரிலை விளையாட்டுச் செய்தியை முழுசாய் திருப்தியாய் படிக்க முடியுது. உதயனுக்கு, சியேர்ஸ் அப்!

ரூபவாஹினி

4 - 1 - 1986
(சனிக்கிழமை)

5.00 — செய்திகள்
5 05 — சப்மரீனர்–கார்ட்டூன்–தொடர்
5.10 —உங்கள் உடலைப்–பற்றி
5.30 — உலக விளையாட்டு ஸ்பெஷல்
6.30 — செய்திகள் (தமிழ்)
7.00 — குரங்குகளின் கிரகம்
8.00 — செய்திகள் (சிங்களம்)
8.25 — யசோரவாய டெலி நாடகம் அங்கம் 10
9.00 — செய்திகள் (ஆங்கிலம்)
9.25 — கங்க பத்ம இசை நிகழ்ச்சி
9.50 — [illegible] துப்பறியும் தொடர்
10.40 —ஒளிபரப்புமுடிவு

## முஸ்லிம் . . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தகளம் செல்லும் முஸ்லிம் வீரர்களுக்கு அன்று இப்படிக் கட்டளையிடப்பட்டதாம். "வெற்றி வாகையுடன் நீங்கள் நாட்டுக்குள் சென்றால் வயோதிபர்கள், பெண்கள், நோயாளிகள், அபயம் தேடியவர்கள், கால் நடைகள், சொத்துக்கள், பழமரங்கள் இவைகளுக்கு எக்காரணம் கொண்டும் அநியாயம் செய்யக் கூடாது" இது அல் குர் ஆனின் கட்டளை. செயல் முறைப் படுத்தப்பட்டது.

ஆனால் இன்று அல் குர் ஆனை ஆராயாத முஸ்லிம்கள் எவ்வளவு தூரம் வழி தவறிவிட்டார்கள். அல் குர் ஆனை ஆராயுங்கள். அதன் வழிப்படி நடந்து கொண்டால் சிறிய ஒரு சமுதாயமாக முஸ்லிம் சமுதாயம் மாறிவிடும்.

## மாநில சுயா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

இதற்கிடையில் சர்வசன வாக்கெடுப்பையோ அல்லது ஒரு தேர்தலையோ நடத்துவதற்கு தயார்நிலையில் இருக்குமாறு தேர்தல் ஆணையாளரை அரசாங்கம் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

அதனைத் தொடர்ந்து மாவட்டங்களில் உள்ள உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு இது சம்பந்தமாக ஒரு சுற்றுநிருபத்தை தேர்தல் ஆணையாளர் விரைவில் அனுப்ப இருக்கிறார்.

சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டால் வடக்கு, கிழக்கில்வாழும் தமிழ் மக்கள், மாநில சுயாட்சியை விரும்புகிறார்களா என்பதைப் பூரணமாகஅறியவாய்ப்பு ஏற்படும் என்றும் அரசாங்கம் கருதுகிறதாம்.

## அறிவித்தல்

யாழ் மாவட்ட உத்தரவு பெற்ற வியாபாரிகள் (உணவு முத்திரைக்கு சாமான்கள் விநியோகிப்பவர்கள்.) அனைவரும் 4 - 1 - 1986 காலை 9.45க்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் கருத்தரங்கில் பங்கு பற்றும் வண்ணம் வேண்டுகிறேன்.

எஸ். செல்லத்துரை
தலைவர்

ஸ்ருடியோ டில்கா
சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக்கொள்ள
Studio Dilkah
(பஸ்நிலைய எதிர் மேல் மாடி)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24174

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், வெளியிட்ட திகதி 04-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org